தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
www.dhinathdhalam.com
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 089 · ஞாயிற்றுக்கிழமை Sunday · 28.06.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# தமிழ் திரையுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

## பாக்யராஜ் மறைவுக்கு முதலமைச்சர் விஜய் மற்றும் தலைவர்கள், திரையுலகினர், பொதுமக்கள் அஞ்சலி



பிரபல திரைப்பட இயக்குநரும், நடிகருமான கே.பாக்யராஜ் (73) திடீர் மாரடைப்பு காரணமாக காலமானார். தமிழ் திரையுலகில் தனது தனித்துவமான திரைக்கதை, வசனம் மற்றும் நகைச்சுவை மூலம் பல வெற்றிப் படங்களை கொடுத்து புகழ்பெற்றவர்.

பாக்யராஜின் இந்த திடீர் மறைவு தமிழ் சினிமா ரசிகர்கள் மற்றும் திரையுலக பிரபலங்களிடையே பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு திரைப்பிரபலங்களும், அரசியல் தலைவர்களும் சமூக வலைதளங்கள் வாயிலாக தங்களது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இயக்குநர் பாக்யராஜ் மறைவுக்கு முதல்-அமைச்சர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழ்த் திரையுலகின் தலைசிறந்த இயக்குநர், நடிகர்,திரைக்கதை ஆசிரியர், வசனகர்த்தா, இசையமைப்பாளர் என பன்முகத் திறமையால் முத்திரை பதித்த கே. பாக்யராஜ் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும், ஆழ்ந்த வேதனையும் அடைந்தேன்.தனித்துவமான கதையாக்கம், நகைச்சுவை கலந்த நடிப்பு, கிராமிய வாழ்வியல் மற்றும் குடும்ப உறவுகளின் ஆழமான உணர்வுகளை பிரதிபலிக்கும் திரைப்படங்கள் மூலம் தமிழ்மக்களின் மனதில் நீங்கா இடம்பிடித்த கே.பாக்யராஜ் அவர்களின் பங்களிப்பு தமிழ்த் திரைப்பட உலகிற்கு அளப்பரியதாகும்.

பாக்யராஜ் உடலுக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள். திரையுலகினர் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக வந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர். பாக்யராஜ் உடலுக்கு நாளை காலை 9.30 மணியளவில் இறுதிச் சடங்கு நடைபெறவுள்ளது.

பாக்யராஜ் உயிரிழந்த செய்தி அறிந்ததும், நுங்கம்பாக்கத்தில் உள்ள அவரின் இல்லத்துக்கு நடிகர் பார்த்திபன் முதல் ஆளாக வந்தார். அதன்பின்னர் அங்கு நடிகைகள் சுஹாசினி, ராதிகா, ஸ்ரீபிரியா, நடிகர் சரத்குமார், அமைச்சர் ராஜ்மோகன் ஆகியோர் அடுத்தடுத்து வந்தனர். அப்போது சுஹாசினி கூறுகையில், "கோவாவில் குஷ்பு மகளின் திருமணத்தில் பாக்யராஜ் மிக மகிழ்ச்சியாக கலந்துகொண்டார். நாங்கள் அனைவரும் நேற்று மாலை தான் வந்தோம். ஆனால், அவர் நேற்று முன்தினமே சென்னை வந்துவிட்டார். மிக மகிழ்ச்சியாகத் தான் இருந்தார். நடைபயிற்சிக்கு சென்று திரும்பி வரும்போது, நெஞ்சு வலிப்பதாக கூறியுள்ளார். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது அவரின் உயிர் பிரிந்தது. சிரித்துக்கொண்டே இருந்தவர், சிரித்துக்கொண்டே சென்றுவிட்டார். இது திடீரென நடந்த விஷயம். குறைந்த வயதில் அவர் உயிரிழந்துள்ளார்" என்றார்.

பாக்யராஜ் உடலுக்கு அஞ்சலி செலுத்திய இயக்குநர்கள் பாண்டியராஜன் மற்றும் பார்த்திபன் ஆகியோர் கண்ணீர் விட்டு அழுதனர். பார்த்திபன் பேசும்போது, "என் வாழ்க்கையின் மிகவும் துக்கமான நாள்" என்று கண் கலங்கினார். பாண்டியராஜன் கூறுகையில், "இன்று நான் மனுஷனா வாழறது அவராலதான்" என்று கண்ணீருடன் சொன்னார்.





அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அஞ்சலி:

தமிழக முதல்வர் விஜய், பாக்யராஜின் நுங்கம்பாக்கம் இல்லத்துக்கு வந்து அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். அதோடு, பாக்யராஜின் மகன் சாந்தனுவை ஆரத் தழுவி ஆறுதல் கூறினார். திரைத்துறையில் கே.பாக்யராஜின் பங்களிப்பைப் போற்றி, அவரது இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை வழங்கப்படும் என முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

பாக்யராஜின் உடலுக்கு முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி, சட்டப்பேரவை சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், விசிக தலைவர் திருமாவளவன், தமிழக காங்கிரஸ்கமிட்டிதலைவர் செல்வப்பெருந்தகை,



அமைச்சர்கள் ராஜ்மோகன், வன்னி அரசு, பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா, தேமுதிக எம்.பி எல். கே.சுதீஷ், காங்கிரஸ் மூத்த தலைவர் திருநாவுக்கரசர், திமுக எம்.பி கனிமொழி, அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், சசிகலா, மநீம தலைவர் கமல்ஹாசன் உள்ளிட்டோர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

திரை பிரபலங்கள் அஞ்சலி:

நடிகர்கள் ரஜினிகாந்த், சிவக்குமார், சரத்குமார், சத்யராஜ், ராமராஜன், மோகன், பிரபு, அர்ஜுன், விஜயகுமார், ஜெயராம், தனுஷ், விக்ரம் பிரபு, நாசர், பிரசாந்த், கவுண்டமணி, செந்தில், மன்சூர் அலிகான், பிரசன்னா, ஒய்.ஜி.மகேந்திரன், ரமேஷ் கண்ணா, ராதா ரவி, எஸ்.வி.சேகர், சார்லி, சின்னி ஜெயந்த், ஜீவா, விமல், பரத், சமுத்திரகனி, ஸ்ரீகாந்த், அருள்நிதி, தம்பி ராமையா, மலையாள நடிகர் திலீப் ஆகியோர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

இயக்குநர்கள் எஸ்.ஏ.சந்திரசேகர், சேரன், அமீர், கரு.பழனியப்பன், பி.வாசு, தியாகராஜன், மணிரத்னம், பாலா, வசந்த், கவுதமன், ராஜேஷ், பேரரசு, லோகேஷ் கனகராஜ், ஹெச்.வினோத், லிங்குசாமி, ஏ.எல்.விஜய், இசையமைப்பாளர் தேவா, கவிஞர் சினேகன், நடிகைகள் கே.ஆர். விஜயா, அம்பிகா, நளினி, சினேகா, சி.ஆர்.சரஸ்வதி, கோவை சரளா ஆகியோர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

பொதுமக்களும் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

# திமுக கூட்டணியில் இருந்து மதிமுக விலகல்: பொதுக்குழுவில் தீர்மானம்

சென்னை: திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இருந்து விலகிக் கொள்வதாக மதிமுக பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், தேர்தல் வரும்போது கூட்டணி குறித்து தக்க முடிவுகளை கட்சி மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதிமுகவின் 32 ஆவது பொதுக்குழு, கட்சியின் அவைத்தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் தலைமையில் சென்னை



அண்ணா நகர், விஜய்ஸ்ரீ மகாலில் நடைபெற்றது.

இதில், கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ சிறப்புரை ஆற்றினார். பொருளாளர் மு.செந்திலதிபன், முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் செஞ்சி ஏ. கே.மணி, ரொஹையா, மு.பூமிநாதன், சு.ஜீவன், சி.கிருஷ்ணன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பொதுக்குழுவில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதல் தீர்மானத்தில், "மதிமுக, 2017 டிசம்பர் 3 ஆம் தேதி நடந்த உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த ஒன்பது வருடங்களாக திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்ந்து வந்தது. தமிழ்நாட்டில் மதவாத அரசியல் சக்திகளை காலூன்ற விடாமல் தடுப்பதற்கும், திராவிட இயக்கத்தின் அடிப்படை லட்சியக் கோட்பாடுகளைத் தகர்ப்பதற்கு விடப்படும் அறைகூவல்களை முறியடிக்கவும் மதிமுக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் கொள்கை அடிப்படையில் இடம் பெற்று இருந்தது.

கடந்த 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் மதிமுகவின் தனித்துவ அடையாளத்தையும், 32 ஆண்டு கால தமிழ்நாட்டு மக்களுக்கான போராட்ட செயல்பாடுகளையும் நீர்த்துப்போக செய்யும் முயற்சிகள் கூட்டணியில் மேற்கொள்ளப்பட்ட போதும் அவற்றைத் தாங்கிக் கொண்டு, எடுத்த முடிவில் உறுதியாக இருந்து சட்டமன்றத் தேர்தலை சந்தித்தோம்.

தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்பே மே 1ம் தேதி வைகோ ஊடகங்களில் கூறியவாறு தமிழ்நாடு அரசியலில் அதிசயிக்கத்தக்கவகையில் தமிழ்நாட்டு மக்கள் சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றி கழகத்திற்கு பேராதரவை வழங்கி இருந்தனர்.

தேர்தல் முடிவுகள் வந்த பின்னர் அரசியல் களத்தில் நடைபெற்ற திரை மறைவு பேரங்கள், மக்கள் வழங்கியத் தீர்ப்புக்கு எதிராக இருந்ததை அனைவரும் அறிந்து அதிர்ச்சி அடைந்தனர். இந்துத்துவ மதவாத சக்திகளோடு கரம் கோர்த்துக் கொண்டு கூட்டணி வைத்து சட்டமன்றத் தேர்தலில், வெறும் 47 இடங்களில் வெற்றி பெற்ற அதிமுகவை ஆட்சி பீடத்தில் அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் நடந்தது ஊரறிந்த ரகசியமே.

இதன் மூலம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, கொள்கை கூட்டணி என்று பிரகடனம் செய்யப்பட்டதெல்லாம், சில அக்கறை உள்ள சக்திகளால் பொருளற்றதாக ஆக்கப்பட்டன.

இந்தச் சூழ்நிலையில், மதிமுக இனியும், திமுக தலைமையிலான கூட்டணியில் தொடரக் கூடாது என்று கழகத்தின் நிர்வாகிகளும், தொண்டர்களும் தங்கள் கருத்தை வெளிப்படுத்தி இருக்கின்றனர். எனவே திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இருந்து விலகிக் கொள்வது என்று பொதுக்குழு முடிவு செய்கிறது. தேர்தல் வரும்போது கூட்டணி குறித்து தக்க முடிவுகளை கழகம் மேற்கொள்வது என்றும் இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, சட்டமன்றத் தேர்தலில் மதிமுக வேட்பாளர்கள் மு.இராசேந்திரன், செந்தில்செல்வன் ஆகியோரை ஆதரித்து வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், களப்பணியாற்றிய கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுக்கும், கட்சி நிர்வாகிகளுக்கும் நன்றி, ஜோசப் விஜய் தலைமையிலான அரசுக்கு வாழ்த்துக்கள், காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்டும் விவகாரத்தில் புதிய நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும்,

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# விருத்தாச்சலம் பெரியகோவிலில் தொடர்ந்து அன்னதானம் வழங்கி வரும் சமூக ஆர்வலர் இளையராஜாவுக்கு பாராட்டு



கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி உடனுறை பழமலை நாதர் திருக்கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வருகை தரும் நிலையில், அவர்களின் பசியைப் போக்கும் நோக்கில் சமூக ஆர்வலரும்,பாஜகமாவட்ட ஓபிசி அணி பொதுச் செயலாளருமான எ. கொளப்பாக்கம் இளையராஜா கடந்த 10 மாதங்களாக தொடர்ந்து அன்னதான சேவையை மேற்கொண்டு வருகிறார். ஓம் சக்தி குரூப்ஸ் & ரியல் எஸ்டேட், எர்த் மூவர்ஸ், நெல் அறுவடை இயந்திர சேவை, டிராக்டர்கள், டிப்பர் மற்றும் டேங்கர்ஸ் உள்ளிட்ட பல்வேறு தொழில் நிறுவனங்க ளை நடத்தி வரும் அவர், தொழில் துறையில் சாதனை படைப்பதோடு சமூக நலப் பணிகளிலும் தீவிர ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறார். ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் நடைபெறும் இந்த அன்னதான திட்டத்தின் மூலம் நூற்றுக்க ணக்கான பக்தர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, நேற்று நடைபெற்ற அன்னதான நிகழ்வில் 200க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. தனது சொந்த நிதியுடன் நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பங்களிப்பையும் ஒருங்கிணைத்து இந்த மனிதநேய சேவையை இடையறாது மேற்கொண்டு வரும் இளையராஜாவின் செயற்பாடு, பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பாராட்டை பெற்றுள்ளது.



# அகில இந்திய பட்டியல் இன இளைஞர் பேரவை தமிழ்நாடு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

## ஈரோட்டில் தேசிய பொதுச்செயலாளர் சிறப்புரை

அகில இந்திய பட்டியல் இன இளைஞர் பேரவை (பதிவு) புது டெல்லியை தேசிய தலைமையிடமாகக்கொண்டு மத்திய உள்துறை அமைச்சகத்தின் NFCH ன் படி அங்கீகாரம் பெற்று அனைத்து பட்டியல்இனமக்களின்கல்வி, பொருளாதாரம்,தொழில் வளர்ச்சி சமூக மேம்பாடு குறித்து மாபெரும் தமிழ்நாடு மாநில நிர்வாகிகள் கலந்தாய்வு ஆலோசனை கூட்டமானது

ஈரோடு மாநகர் தண்ணீர்பந்தல்பாளையம் பிரிவில் உள்ள ஸ்ரீ மகா மஹால் மிகவும் சிறப்பாக நடைபெற்றது .இந்த நிகழ்விற்கு மாநில தலைவர் P.அய்யாசாமி தலைமை தாங்கினார். மாநில செயல் தலைவர் M.வெற்றிவேல், மாநில பொருளாளர் V.ஜெயராமன் முன்னிலை வகித்தார்.முதல் நிகழ்வாக டாக்டர் அம்பேத்கர் மற்றும் தேசிய தலைவர் S.P. சந்தேல், மாநில

இணைச்செயலாளர் K.K ராஜா , தூத்துக்குடி மாவட்ட தலைவர் முருகேசன் ஆகியோர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்விற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று மாநிலபொதுச்செயலாளர் K.குப்புசாமி வரவேற்புரைநிகழ்த்தினார்.இந்த நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்திற்கு டெல்லியில் இருந்து வருகை புரிந்த தேசிய பொதுச் செயலாளர் S.சுமித் சந்தேல் சிறப்புரை ஆற்றினார்.

மேலும் இந்த நிகழ்வில் தேசிய பொது செயலாளர், நியூ டெல்லி (தமிழ்நாடு பொறுப்பு) K.முத்துசுவாமி, முன்னாள் மாநில தலைவர், சேலம் R. மணி, தமிழ்நாடு அரசு மருத்துவத்துறை அனைத்து ஊழியர் சங்கத்தின் நிறுவன தலைவர் சென்னை

Dr.M.வெங்கடாசலம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.இந்த நிகழ்வில் K. சுப்பிரமணி, P. கிருஷ்ணன், A. கருப்பையா, A. கருப்பசாமி, P. மேகநாதன், K.ரஞ்சித்குமார், T. கௌதமன், P. ஜோதிமணி ஆகிய மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

இறுதி நிகழ்வாக இந்த நிகழ்விற்கு வருகை தந்த அனைவரைக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக ஈரோடு மாவட்ட தலைவர் G. தங்கவேல் நன்றியுரையாற்றினார் . இந்த நிகழ்வில் 150 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டு இறுதிவரை அமைதிகாத்து சிறப்பித்தனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன்மலையில் இரவில் சென்ற அரசு பேருந்து மலைப்பாதையில் உள்ள சாலை ஓரத்தில் உள்ள மரத்தில் மோதி விபத்து பேருந்தில் பயணம் செய்த 30க்கும் மேற்பட்ட பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

### முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு

# கோவை சாய்பாபா கோவிலில் சிறப்பு வழிபாடு

கடந்த ஒரு மாத ஆட்சியில் மக்கள் மனதை கவர்ந்த ஒரு முதல்வராக தமிழக வெற்றிக்கழக தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் இருந்து வருகின்றார். அவரைப்பற்றி தூற்றுபவர்களை பற்றி நாங்கள் ஒரு போதும் கவலை பட மாட்டோம்..

கோவை சாய்பாபா கோவிலில் தமிழக வெற்றிக்கழக கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் வி.ராஜ்குமார் பேட்டி...

தமிழக வெற்றிக்கழக தலைவரும், தமிழக முதல்வருமான ஜோஸப் விஜய்யின் 52வது பிறந்தநாளை கடந்த இரு தினங்களுக்கு முன்னர் தமிழகம் முழுவதும் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள், பொருப்பாளர்கள் முன்னிலையில் கொண்டாட பட்டது. இந்த நாளில் தமிழகம் முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கபட்டது. இந்த நிலையில் கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் வி. ராஜ்குமார் தலைமையில், கோவை சாய்பாபா கோவிலில் சிறப்பு வழிபாடு நடத்த பட்டு தங்கத்தேர் இழுக்க பட்டது. பொதுவாக கோவை சாய்பாபா கோவில் பகுதியில் அமைந்துள்ள நாகசாயி மந்தீர் திருக்கோவிலில் ஒவ்வொரு வாரமும்



வியாழக்கி ழமை நாட்களில், இக்கோவிலுக்கு வருகின்ற பக்தர்களின் எண்ணிக்கையும் அதிக அளவில் இருக்கும் இந்த நாளில் கூடுதல் சிறப்பம்சமாக தமிழக வெற்றிக்கழகம் கோவை புறநகர் வடக்கு மாவட்டம் சார்பாக தங்கத்தேர் இழுக்கும்நிகழ்ச்சிவெகுவிமரிசையாக நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் சாய்பாபா எழுந்தருளி திருக்கோவிலை சுற்றி வந்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாய்பாபா அருள் பெற்றனர். பின்னர் அனைவருக்கும் திருக்கோவில் சார்பாக பிரசாதங்கள் வழங்கபட்டது இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக்கழக புறநகர் வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் கார்த்திக், தமிழக வெற்றிக் கழக மாவட்ட தொண்டரணி மகேஷ்குமார், கனேஷ் குமார், ஆதவ் ராஜ், அம்பிகா சரவணன், மற்றும் விக்னேஷ் பிரபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தங்கத்தேரை வடம் பிடித்து இழுத்து வந்தனர். தொடர்த்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் வி. ராஜ்குமார் கூறியதாவது.. ஆட்சி அமைந்து ஒரு மாதத்திற்கு மேல் ஆன நிலையில், மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்ற ஆட்சியாக நடைபெற்று வருகின்றது என்பது பொதுமக்கள் எங்கள் மீது காட்டும் அன்பில் தெரிவிக்கின்றது. எத்தனை நல்லது மக்களுக்கு செய்தாலும், குறை சொல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் குறை கூறி கோண்டு தான் இருப்பார்கள் அதனைதமிழகவெற்றிக்கழக தலைமை முதல் அடிப்படை உறுப்பினர் வரை யாரும் கவலை கொள்ள வேண்டாம் என்று தலைவர் விஜய் தெரிவித்துள்ளார் அதன் படி நாங்கள் அக்கருத்துகளை பற்றி எல்லாம் கவலை பட மாட்டோம் என்று உறுதியாக தெரிவித்ததுடன் இன்றைய தங்கதேர் இழுத்ததன் நோக்கமே மக்களின் முதல்வராகஉள்ளதலைவர் விஜய் 100 ஆண்டுகள் வாழ வேண்டும் என்று பிரார்த்தனை செய்து இதனை செய்ததாக தெரிவித்தார்.

### கோவை தடாகம் சாலை, நஞ்சுண்டாபுரம் ஊராட்சியில் பள்ளி மாணவர்களுக்கு

# விகேவி குரூப் ஆப் கம்பெனிஸ் சார்பில் 20ம் ஆண்டாக நோட்டு புத்தகங்கள், புத்தகப்பை வழங்கப்பட்டது




கோவை சோமையனூர் விகேவி குரூப் ஆப் கம்பெனிஸ் சார்பில் ஆண்டு தோறும் நஞ்சுண்டாபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்து அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டுப்புத்தங்கள் மற்றும் புத்தக்கப்பை வழங்கப்ப ட்டு வருகிறது. இந்த ஆண்டும் 20வது ஆண்டாக நோட்டு புத்தகங்கள் மற்றும் புத்தகப்பை வழங்கும் விழா நடைபெற்றது.இதில் ஊராட்சிக்கு உட்பட்ட பள்ளிகளுக்கு நேரில் சென்று நஞ்சுண்டாபுரம் ஊராட்சி முன்னாள் தலைவர் மற்றும் விகேவி குரூப் ஆப் கம்பெனிஸ் சேர்மன் விகேவி சுந்தரராஜ் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு நோட்டுபுத்தகங்கள், புத்தக ப்பைகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். தொடர்ந்து இறுதியாக சோமையனூரில் நடைபெற்ற விழாவில் சோமையனூர் அரசுப் பள்ளி மாணவ,மாணவிகள் சுமார் 300க்கும் மேற்பட்டோருக்கு நோட்டுபுத்தகங்கள், புத்தகப்பைகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.இந்த நஞ்சுண்டாபுரம் ஊராட்சிகுட்பட்ட அரசு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி பள்ளிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். அதில் பாப்பநாயக்கன்பாளையம் நடுநிலைப்பள்ளியில்220மாணவ, மாணவிகளுக்கும், ராமநாதபுரம் தொடக்கப்பள்ளியில் 110 மாணவ, மாணவிகளுக்கும், வரப்பாளையம் தொடக்கப்பள்ளியில் 75 மாணவ, மாணவிகளுக்கும், 22.நஞ்சுண்டாபுரம் தொடக்கப்பள்ளியில் 80 மாணவ,மாணவிகளுக்கும், உஜ்ஜையனூர் தொடக்கப்பள்ளியில் 180 மாணவ, மாணவிகளுக்கும் மற்றும்சோமையனூர் நடுநிலைப்பள்ளியில் 350 மாணவ, மாணவிகளுக்கும் சுமார் 8 லட்சம் மதிப்பில் நோட்டுபுத்தகங்கள், புத்தகப்பைகள் வழங்கப்பட்டது. இதில் விகேவி குரூப்ஸ் நிர்வாக இயக்குநர் எஸ் வினீஸ், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் கார்த்திகேஸ்வரி சுந்தர்ராஜ், ஊராட்சி முன்னாள் துணைத்தலைவர் திருநாவுக்கரசு, முன்னாள் உறுப்பினர்கள் சோமசுந்தரம், குமாரசாமி, நாகராஜ், ஆறுமுகம், புஷ்பலதா, வேணி, ஆனந்த், இந்திராணி,சவிதா,மணிவாசகம், ஆசிரியர் சின்ராஜ் ஒய்வு, ஜெயக்குமார், ஊர் முக்கியஸ்தர்கள், முன்னள் ஒன்றிய கவுன்சிலர் குணசேகரன், முன்னாள் துணைத் தலைவர் மகேஸ்வரன், பேருந்து மேலாளர் அருண்குமார், விகேவி குரூப்ஸ் ஊழியர்கள் மற்றும் பெற்றோர்கள், மாணவ மாணவிகள் திரளாக கலந்துகொண்டனர். தொடர்ந்து அனைவரும் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

# தங்கம் என நினைத்து கவரிங் நகைகளை திருடிய 2 பேர் கைது



சென்னை:

வீடு புகுந்து தங்கம் என நினைத்து கவரிங் நகையை திருடி தப்பிய இரு இளைஞர் கள் கைது செய்யப்பட்டனர்.

அசோக் நக ர், இந்திரா காலனி 4-வது அவெ ன்யூவைச் சேர்ந் தவ ர் பிரபு சீனிவாஸ் (53).

இவரது வீட்டில் புனரமைப்பு ப ணிகள் நடைபெற்று வந்ததால், அவர் அண்ணா நகரில் உள்ள தனது பெரியப்பாவீட்டில் தங்கி வந்தார்.

கடந்த 2 4-ம் தேதி மாலை புனரமைப்பு பணி களை முடித்து தொழிலா ளர்கள் சென்ற பின், மறு நா ள் காலை மீண்டும் பணிக்கு வந்த தொழிலா ளர்கள் வீட்டை திறந்து பார்த்தபோது, பீரோவில் இருந்த சுமார் 40 கிராம் எடையுள்ள கவரிங் ஆரம் , செல்போன் மற் றும் வீ ட்டில் பொருத்தப் பட் டிருந்த 6 பித்தளை பைப் புகள் , குழாய்கள் ஆ கி யவை மர்ம நபர் களா ல் திருடப்பட்டிருந் தது தெரியவந்தது.

இதுகுறித்து பிரபு சீனி வாஸ்குமரன் நகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் அளித்தா ர். அதன் பேரில் போலீஸார் வழக் கு ப்ப திவு செய்து விசா ரணை நடத்தினர். இதில், பிர பு சீ னிவாஸ் வீட்டில் திருட்டில் ஈ டுபட்டது வடபழனி ஒ த்த வாடை தெருவைச் சேர்ந்த கார்த் தி கேய ன் ( 20), எம் .ஜி. ஆ ர் . நக ரை ச் சே ர்ந்த சதீஸ் குமார் (20) என்பது தெரிந்தது.

இதை யடுத்து, தலைமறை வாக இருந்த இரு வ ரை யும் போலீஸார் நேற்று முன்தினம் கைது செய் த ன ர். விசாரணை யி ல், இருவ ரும் வீட்டின் பின்வாசல் வழியாக நள்ளிரவில் உள்ளே புகுந்து தங்கநகைஎனநினைத்து கவரிங் நகையை திருடியதும், போகும்போது செல்போன் மற்றும் பித் தளை பைப்புகளை திருடிச் சென் றதும் தெரிய வ ந் த தாக போலீஸார் தெரிவித்தனர். இதையடுத் து, இருவரும் சிறை யில் அ டைக்கப்பட்ட னர்.

# பெண்ணாடம் அரிமா சங்கத்தின் 40ஆம் ஆண்டு சேவைப்பணி ஏற்பு மற்றும் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா



பெண்ணாடம் அரிமா சங்கத்தின் 40-ஆம் ஆண்டு சேவைப்பணி ஏற்பு மற்றும் 2026 - 2027 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா, பெண்ணாடம் கிழக்கு நெடுஞ்சாலையில் உள்ள அஞ்சலி சுப மஹாலில் நேற்று (ஜூன் 27) கலைநிகழ்ச்சிகளுடன் வெகு சிறப்பாக நடை பெற்றது.

இணையில்லா வேகம் ஈடில்லா ஏற்றம் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடைபெற்ற இந்த விழாவிற்கு, சங்கத்தின் தற்போதைய தலைவர் ஈ. வசந்தராஜ் தலைமை தாங்கினார்.

சேவைத்திட்டச் செயலாளர் ஈ. அழகுவேலன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். நிர்வாகச் செயலாளர் எஸ். வினோத்குமார் கடந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையையும், பொருளாளர் மருத்துவர் ஜெ. ஜெயப்பிரகாஷ் பொருளறிக்கையையும் வாசித்தனர். வட்டத் தலைவரும் சாசனத் தலைவருமான எம். ஞானப்பிரகாசம் மற்றும் முன்னாள் கூட்டு மாவட்டத் தலைவர் வி. இரத்தினசபாபதி ஆகியோர் விழாவிற்கு முன்னிலை வகித்தனர்.

உலக திருக்குறள் கூட்டமைப்பு தலைவரும், மாவட்டத் தலைவருமான எம். ஞானமூர்த்தி விழாவின் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். விழாவின் முக்கிய நிகழ்வாக, முன்னாள் மாவட்ட ஆளுநர் என். ஆர். தனபாலன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, புதிய தலைவராக ஆர். பாண்டியன், பொருளாளராக வ. கணேஷ், இரண்டாம் துணைத்தலைவராக எம். பாலசுப்பிரமணியன் மற்றும் பிற புதிய நிர்வாகிகளை முறைப்படி சேவைப் பணியில் அமர்த்தி வாழ்த்துரை வழங்கினார். புதிய தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்ட ஆர். பாண்டியன் தனது ஏற்புரையை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து, முன்னாள் மாவட்ட ஆளுநர்வி.டி.இ.திருநாராயணன் சங்கத்தின் புதிய சேவைப்பணிகளைத் துவக்கிவைத்து வாழ்த்துரை வழங்கினார்.

மேலும், சி.எஸ். அட்மின் என். ஆர். ரவிச்சந்திரன், கேபினட் பொருளாளர் டி. வி. கே. வி. சக்திவேல், வட்டாரத் தலைவர்கள் டி. ஆனந்தன் மற்றும் டி. அருள் முருகன், ஜி.எஸ்.டி. அலுவலர் ஜி. கே. ராஜேந்திரன், மிஷன் 1.5 அலுவலர் என். தங்கதுரை மற்றும் டி.சி.செயலாளர் வேல்முருகன் ஆகியோர் புதிய நிர்வாகிகளுக்கு தங்களது வாழ்த்துரைகளை வழங்கினார்கள்.

சமூக சேவையில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் பெண்ணாடம் அரிமா சங்கம், கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறந்த சங்கத்திற்கான விருதுகளைப் பெற்று வருவதுடன், நடப்பாண்டில் சிறப்பு வாய்ந்த ஐந்து நட்சத்திர விருதையும் பெற்றுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 6200 சேவைத் திட்டங்களைச் செய்து மாவட்டத்திலேயே முதலிடம் பிடித்துள்ளது. குறிப்பாக இருங்களாக்குறிச்சியில் 64 ஏக்கர் பரப்பளவுள்ள நீலாம்புரம் ஏரியைத் தூர்வாரும் மகத்தான பணியிலும் இச்சங்கம் முக்கியப்பங்காற்றியுள்ளது. கண் தானம், உடல் தானம், இரத்த தானம் மற்றும் மரம் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாக, விழாவிற்கு வந்திருந்தவர்கள் சால்வை அணிவிப்பதைத் தவிர்த்து, அதற்குப் பதிலாகச் சேவை நிதியை வழங்குமாறு விழாக் குழுவினர் சார்பாகக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இவ்விழாவில் மாவட்டத் தலைவர்களான சீனுப். பழமலை, கிருஷ்ணமூர்த்தி, மாரிமுத்து, மேழிச்செல்வன், சாசன உறுப்பினர் ராமலிங்கம், தமிழரசன், சிவப்பிர காசம், பாலாஜி, ஹரிகிருஷ்ணன், பாஸ்கர், ரவி, அங்குஷ் மாலிக், வசந்தா இளங்கோவன், பிரியா, ஞானசேகர், எஸ். கண்ணன், பி. சத்தியபாலன், டாடாஜி கௌதம், பி.வரலெச்சுமி, ஆர்.ரமேஷ், டி. விக்னேஷ், கே. எஸ். எம். சக்திவேல், பிரேம் கம்பீரநாதன் மற்றும் பெண்ணாடம் அரிமா சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். முடிவில் புதிய சேவைத்திட்டச் செயலாளர் பி. வேல்முருகன் நன்றியுரை கூற, பதவியேற்பு விழா இனிதே நிறைவடைந்தது.



கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் தொகுதி உட்பட்ட நல்லூர் ஒன்றியத்தில் புதிதாக பொறுப்பு ஏற்றுள்ள விடுதலை சிறுத்தை கட்சி ஒன்றிய பொருளாளர் யா, முனுசாமி ஒன்றிய துணைச் செயலாளர் நவீன் குமார் மணிகண்டன் மட்டும் கட்சி நிர்வாகிகள் விருத்தாச்சலம் தொகுதி மாவட்ட செயலாளர் வீர திராவிட மணியை சந்தித்து நன்றி தெரிவித்தனர் இந்நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்

# "Sportsஅ எடு, Drugsஅ விடு" போடிநாயக்கனூரில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்

"Sports-அ எடு, Drugs-அ விடு" (Start Sports, Stop Drugs) என்ற முழக்கத்துடன், ஜூன் 26 சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சென்னையில் மாண்புமிகு தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் மாபெரும் விழிப்புணர்வு தொடர் ஓட்டப்பந்தயத்தைத் துவக்கி வைத்தார்.



அதன் முன்உதாரணமாக, தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் உள்ள கிரீன் ராயல் (Green Royal) அரங்கில், நேற்று (26.06.2026) மாலை 5:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை "இணையும் கரங்கள்" என்றதலைப்பில்போதை விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு, Foundation of Public Social Welfare Trust மற்றும் Wave Foundation ஆகியவை இணைந்துநடத்திய இக்கருத்தரங்கில், "அரசின் போதை விழிப்புணர்வு திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பாலமாகதொண்டு நிறுவனங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும்" என்பது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு விபரம்:

தலைமை:திரு.R.S.பிரகாஷ் (தேனி வடக்கு மாவட்டச் செயலாளர்)

முன்னிலை: திரு. T .B.S.S.C.S. வடமலை ராஜா பாண்டியன்

சிறப்பு விருந்தினர்கள்:

இவ்விழாவில் போடி நகரின் முக்கியப் பிரமுகர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்:

பால்பாண்டியன்

டாக்டர் மனோஜ் குமார் (எலும்பு முறிவு நிபுணர்)

வேல்முருகன் (வர்த்தக சங்கம்)

முரளி (நியூ விஜயா ஹோட்டல்)

திரு. பாலகிருஷ்ணன் (மீனாட்சி மெத்தை கடை உரிமையாளர்)

பாண்டி முனீஸ்வரன்

அன்பழகன்

கு மரேசன் (தணிக்கையாளர் / Auditor)

கலைச்செல்வன் (கர்ணா ஹோட்டல்)

M. சீனி ராஜ் (தமிழக வி வசாயிகளின் பாதுகாப்புச் சங்கத்தின் தேனி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்)

முக்கியத் தீர்மானம்:

இ க்கருத்தரங்கில், இ ளம்தலைமுறையினரை போதைப்பாதையி ல் இருந்து மீட்டு, விளையாட்டு மற்றும் ஆக்கப்பூர்வமான வழிகளில் திருப்புவதற்கும், தமிழக அரசின் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஒவ்வொரு சாமானிய மக்களிடமும் தொண்டு நிறுவனங்கள் மூலமாகக் கொண்டு சேர்க்கவும் உறுதிமொழி ஏற்வப்பட்டது.

இவ்விழாவில் போடி நகரின் முக்கியப் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.

## தமிழகத்தில் முதல் ப்ரத்யேகமான முழுமையான நெஞ்சுவலி சிகிச்சை மையத்திற்கான சான்றிதழ் பெற்ற

# ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனை நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை வழங்கியதால் அமேரிக்கன் ஹார்ட் அசோசியேஷன் அங்கீகாரம் வழங்கியது



உலக அளவில், இதயம் மற்றும் மூளை ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காகசெயல்பட்டு வருகின்றன.

அமேரிக்கன் ஹார்ட் அசோசியேஷன் அறக்கட்டளை, கோவையில் செயல்பட்டு வருகின்ற ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு, தமிழகத்தில் முதல் காம்பிரஹேன்சிவ் செஸ்ட் பெயின் சென்டர் என்ற சர்வதேச சான்றிதழை வழங்கியுள்ளது. மாரடைப்பு நோயாளிகளுக்கு உயிர்காக்கும் சிகிச்சையை உரிய நேரத்தில் பெறுவதில், ஏற்படும் தாமதங்களை குறைத்து, உடனடி மற்றும் மேம்பட்ட இதய சிகிச்சையை வழங்குவதில் மருத்துவமனை வகித்த முக்கிய பங்கிற்காக இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சான்றிதழ் வழங்கப்பட்டதை வெளியிடும் நிகழ்ச்சி கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. இதில் ஸ்ரீ எஸ்என்ஆர் அறக்கட்டளையின் நிர்வாகஅறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன், எஸ்.என்.ஆர் அண்ட் சன்ஸ் அறக்கட்டளையின் தலைமை செயல் அதிகாரி சி.வி ராம்குமார், தலைமை நிர்வாகஅதிகாரி மகேஷ் குமார், ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் மருத்துவ இயக்குனர் ராஜகோபால், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் அழகப்பன், மற்றும் இதயவியல் துறையின் மூத்த தலைவர்கள், ஆலோசகர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு இந்த சான்றிதழை வெளியிட்டனர். தமிழகத்தில் 30 முதல் 69 வயது மேற்பட்டவர்களிடையே ஏற்படும் மொத்த உயிரிழப்புகளில் சுமார் 36 சதவிகிதம் இதய மற்றும் இரத்தநாள நோய்களால் ஏற்படுகின்றது. சமீபத்திய தரவுகளின் படி மாரடைப்பால் ஏற்படும் உயிரிழப்புகள் ஆண்டுதோறும் 12.5 சதவிகிதம், அதிகரித்து வருகின்றது. இதய நோய்களில் அதிகரித்து வரும் பாதிப்பு, குறிப்பாக எஸ்டி பிரிவு உயர்வின் கூடிய மாரடைப்பு எனப்படும் மிகத் தீவிரமான மாரடைப்பு வகைகளுக்கான சிகிச்சையை தொடர்ந்து மேம்படுத்த வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது. தமிழகத்தில் முதல்முறையாக, இச்சான்றிதழ் பெரும் மருத்துவமனை ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை எனவும், இந்திய அளவில் இச்சான்றிதழ் பெற்ற மருத்துவமனைகள் ஐந்து மட்டுமே உள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக மாணிக்கம் தாகூர் நியமனம்



சென்னை: தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக மாணிக்கம் தாகூர் நியமிக்க ப்பட்டிருக்கிறார். செல்வப்பெருந்தகை மாற்றம் தேர்தல் முடிந்தவுடனேயே நிகழும்என்றுஎதிர்பார்க்கப்பட்டநிலையில்,இப்போது அவர் மாற்றப்பட்டு மாணிக்கம் தாகூர் நியமிக்க ப்பட்டிருக்கிறார்.

இதற்கான உத்தரவை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிறப்பித்துள்ளதாக காங்கிரஸின் எக்ஸ் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்,தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் புதிய தலைவராக மாணிக்கம் தாகூரின் நியமனம் உடனடியாக அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக,இன்று மதியம் ஹரியானா மாநில காங்கிரஸ் தலைவராக சஞ்சய் தத், உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவராக ராஜேந்திர பால் மற்றும் ஒடிசா காங்கிரஸ் தலைவராக லால்ஜி தேசாய் நியமிக்கப்பட்டனர். தொடர்ந்து தமிழக காங்கிரஸ் தலைவராக மாணிக்கம் தாகூர் அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

விருதுநகர் எம். பி.யான மாணிக்கம் தாகூர், தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு வெகு நாட்களுக்கு முன்னதாக ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு என்ற நிலைப்பாட்டை முன்னெடுத்து காங்கிரஸ் - திமுக கூட்டணியில் விரிசல் என்ற பேச்சுக்கு வழிவகுத்தார்.

தொடர்ந்து திமுகவை பல்வேறு தருணங்களிலும் விமர்சித்து வந்தார். திமுக கூட்டணியில் காங்கிரஸ் இருக்கக் கூடாது என்பதையும் மறைமுகமாக வலியுறுத்தி வந்தார். அவரது கருத்துகளால் எக்ஸ் தளத்தில் திமுக - காங்கிரஸ் கட்சியினரிடையே பெரிய அளவில் வார்த்தைப் போர் நடந்தது நினைவுகூரத்தக்கது.

இந்தச் சூழலில் தமிழக சட்டப்பேரவைதேர்தல்முடிந்ததும் காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை மாற்றப்படுவார் என்றே கூறப்பட்டது. செல்வப்பெருந்தகையும் அந்தக் கருத்துகளை மறுக்கவில்லை. தலைமைப் பதவியில் இருந்து எப்போது வேண்டுமானாலும் விலகத் தயாராக இருப்பதாகவே கூறினார்.

செல்வப்பெருந்தகையும்அந்தக்கருத்துகளை மறுக்கவில்லை. தலைமைப் பதவியில் இருந்து எப்போது வேண்டுமானாலும் விலகத் தயாராக இருப்பதாகவே கூறினார்.

இந்நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக மாணிக்கம் தாகூர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மாணிக்கம்தாகூர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியுடன் அணுக்கமாகச் செல்லக் கூடியவர் என்றும் கூறப்படுகிறது.

2009, 2019 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்களில்விருதுநகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோயிலில் இருந்து திருடி வெளிநாட்டுக்கு அம்மன் சிலை கடத்த முயற்சி: 3 பேர் கும்பல் கைது

சென்னை:

கோயிலில் இருந்து திருடி வெளிநாட்டுக்கு அம்மன் சிலை யை கடத்தமுயன்ற3பேரை சிலை கடத்தல் தடுப்பு பி ரிவு போலீஸார் கைது செய் துள்ள னர்.



காஞ்சிபுரம் சரக சிலை திருட்டு தடுப்புப் பி ரிவு காவல் ஆய் வாளர் உமாராணிக்கு, காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் தாலுகா திம் ம ராஜ ன்பேட்டை பே ருந்து நிறுத்தம் அ ருகே 3 பேர் தொன் மை யா ன சிலையை பையில் வைத்து கடத்த முயற் சிப்பதாக ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து தனிப் படை போலீஸார் சம்பவ இடம்விரைந்தனர். அப்போது அங்கு நின் றிரு ந்த 3 பேர் போலீ ஸாரை கண்டதும் தப்பி ஓட முயன்றனர். அவர்களை ம டக்கிப் பிடித்து விசாரணை நடத்தியதில், பிடிபட்ட வர் கள் செங்கல்பட்டு மாவ ட் ட ம் தெள் ளி மே டு பகுதியைச் சேர்ந்த பிரே ம்குமார் (33), அ தே மாவட்டம் ஆத்தூர் வடபாதியைச் சேர்ந்த புருஷோ த் தமன் (33), காஞ்சிபுரம் மாவட்டம் நத்தப்பேட் டையைச் சேர்ந்த விக் னேஷ் ( 36) எ ன்பது தெரியவந்தது.

விக் னேஷ் வைத் தி ரு ந்த பையை சோ தனை செய்த போது, 30.5 செ.மீ. உயரம், 16 செ.மீ. அகலம், சு மார் 2 .3 00 கிலோ எடை கொண்ட தொன் மையான உலோக அம் ம ன் சி லை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த சிலையை வெளி நாட்டுக்கு கடத்த திட்ட மிட்டதும் உறு தி செய் யப்பட்டது.

மு த ற்கட்ட விசா ர ணையில், தமிழகத் தில் உள்ள ஏதேனும் ஒருகோயிலில்இருந்து அ ந்த சி லை சட்ட விரோத மாக திருடப் பட்டிருக்கலாம் என்று போலீ ஸார் சந்தேகிக் கின்றனர்.

இ தை ய டுத்து 3 பேரையும் போலீஸார் கைது செய்தனர்.



# "அயோத்தி ராமர் கோயில் காணிக்கை திருட்டுக்கு யார் பொறுப்பு?" பிரியங்கா காந்தி சரமாரி கேள்வி

வயநாடு: அயோத்தி ராமர் கோயில் காணிக்கை திருடப்பட்டது துரதிருஷ்டவசமானது, அவமானகரமானது என்று பிரியங்கா காந்தி விமர்சித்துள்ளார்.

கேரளத்தில் உள்ள தனது சொந்த தொகுதியான வயநாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற காங்கிரஸ் மூத்த தலைவர் பிரியங்கா காந்தி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர், "அயோத்திராமர்கோயிலுக்குநாடு முழுவதிலும் உள்ள பக்தர்கள், காணிக்கைகளை வழங்கி உள்ளனர். இப்போது, அந்த காணிக்கை திருடப்பட்டதாக தெரிகிறது. இதனை துரதிருஷ்டவசமானதாகவும், அவமானகரமானதாகவும் நான் கருதுகிறேன்.

இந்த காணிக்கை பொதுமக்கள் வழங்கியது. பெண்கள் தங்கள் சேமிப்பில் இருந்தும் வீட்டில் இருந்தும் வழங்கியுள்ளனர். ஏழை மக்களும் வழங்கியுள்ளனர். இவை பெரிய கார்பரேட் நிறுவனங்கள் வழங்கிய நிதி மட்டுமல்ல. சாதாரண குடிமக்களிடம் இருந்து திரட்டப்பட்ட நிதி இவை. இதற்கென பிரத்யேகமாக ஒரு இயக்கம் நடத்தப்பட்டது. இதற்கு யார் பொறுப்பு? நீங்கள்தான்

இதைச் சேகரித்தீர்கள் என்றால், அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருப்பது உங்கள் பொறுப்பு" எனதெரிவித்துள்ளார்.

அயோத்தி ராமர் கோயில் காணிக்கையில் முறைகேடுகள் நடந்துள்ளதாக கடந்த 7-ம் தேதி தகவல் வெளியானது. இதையடுத்து, ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ர அறக்கட்டளையின் கோரிக்கையை ஏற்று உத்தரப் பிரதேச அரசு கடந்த 13-ம்தேதி சிறப்பு புலனாய்வு விசாரணைக் குழு ஒன்றை நியமித்தது. இக்குழு தனது இடைக்கால அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

சிறப்பு புலனாய்வுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஜூன் 25ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து ஜூன் 26ம் தேதி குற்றம்சாட்டப்பட்ட 8 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் வரும் 29ம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# வானிலை முன்னறிவிப்பு: நீலகிரி, கோவை, திண்டுக்கல், தேனிக்கு கனமழை வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் நீலகிரி,தேனி,திண்டுக்கல் மாவட்டங்கள் மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மத்திய மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திரப் பகுதிகளின் மேல் சுமார் 5.8 கி.மீ. உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

கடலோர ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மத்திய மகாராஷ்டிரா வரை, வடக்கு தெலங்கானா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகள், மராத்வாடா பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியின் வழியாகசுமார் 3.1 கி.மீ. முதல் 4.5 கி.மீ. உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்ததாழ்வுபாதை நிலவுகிறது.

இவை காரணமாக நாளை (ஜூன் 28) சென்னை,செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை,வேலூர்,திருப்பத்தூர், திருவண்ணாமலைமற்றும்விழுப்புரம் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

நீலகிரி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்கள் மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் நாளை கனமழை பெய்யக்கூடும்.

29-ம் தேதி நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளிலும் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

ஜூன் 30 முதல் ஜூலை 3-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல்பகுதிகளில் நாளை முதல் ஜூலை 1-ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும்.

துநகர் மாவட்டம் புல்வாய்க்கரையில் தலா 5 செ.மீ., விருதுநகர் மாவட்டம் ஆவியூர், சிவங்கை மாவட்டம் திருப்புவனம், ஈரோடு, திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது.

# தனுஷ்கோடியில் தென்படும் அரிய வகை வெண் வயிற்று ஆழிக் கழுகுகள்!



மதுரை: தனுஷ்கோடியில் தென்படும் அரிய வகை வேட்டையாடிப் பறவையினமான வெண் வயிற்று ஆழிக்கழுகுகள் பாதுகாக்க அரசுக்கு இயற்கை ஆர்வலர்கள் கோரிக்கைவைக்கின்றனர்.

தனுஷ்கோடி, பாம்பன், மண்டபம் உள்ளிட்ட ராமநாதபுரம் கடலோரப் பகுதிகளில் அரிய வகை வெண் வயிற்று ஆழிக் கழுகள் காணப்படுவதைஅடுத்து, பறவையியல் ஆர்வலர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள். கடல் மீன்களையும், கடல் பாம்புகளையும் வேட்டையாடும் இந்த வேட்டையாடிப் பறவைகளை பாதுகாக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இந்திய கடலோரப் பகுதிகளில் வெண் வயிற்று ஆழிக் கழுகு, ஒரு முக்கியமான வேட்டையாடிப் பறவை இனமாகும். உலகில் ஆஸ்திரேலியா, மற்றும் தென் கிழக்கு நாடுகளில் இவற்றின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இவற்றின் எண்ணிக்கை மிக கவலைக்கு உரியதாகவே உள்ளது. கடலோரங்களில் வசிக்கும் இந்த கழுகு தான் புராண ங்களில் சித்தரிக்கப்படும் உண்மையான கருடன் ஆகும். ஆனால், தற்காலத்தில் தவறுதலாக உருவத்தில் மிகச் சிறிய செம்பருந்து கருடனாக புரிந்து கொள்ளப்படுகிறது. இவற்றின் இறக்கைகள் விரித்த நிலையில் இதன் அளவு ஐந்து முதல் ஏழு அடிகள் வரை இருக்கும். கடலில் மீன்களையும், கடல் பாம்புகளையும் வேட்டையாடும் வகையில் வலிமையான கால் நகங்களையும், கூர்மையான அலகுகளையும் இவைகள் பெற்று இருக்கும்.

இந்நிலையில், வெண் வயிற்று ஆழிக்கழுகுகள் குறித்த ஆய்வினை மன்னார் வளைகுடா பகுதிகளில் இறகுகள் அம்ரிதா இயற்கை அறக்கட்டளையின் ரவீந்திரன், முனைவர் பைஜு மற்றும் ஆய்வு மாணவி மைத்திரி கடந்த ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

இவர்கள் கூறியது: "எங்களின் ஆய்வின்படி இக்கழுகு இனங்கள் உயரமான மரங்களை புறக்கணித்து மின் கோபுரங்களிலும், தொலைத் தொடர்புக் கோபுரங்களிலும், செயற்கை கட்டுமான பகுதிகளிலும் கூடமைக்க துவங்குகின்றன என அறிய முடிகிறது. இவைகள் ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே ஒன்று அல்லது இரண்டு முட்டைகள் இடும். பெரும்பாலும் அவற்றில் இருந்து வெளி வரும் குஞ்சுகளில் ஏதாவது ஒன்றுமட்டுமேபிழைத்து இருக்கும்.

இதுபோன்ற அரிய வகை பறவைகளின் உண்மையான வாழ்விட பகுதிகள் ஆன உயர்ந்த மரங்கள், வெட்டப்படுவதாலும், பல்வேறு காரணங்களால் மனிதர்களால் தொடர்ந்து தொந்தரவு செய்யப்படுவதாலும், இடங்கள் ஆக்கிரமிக்க படுவதாலும் இவைகள் ஆபத்தான உயர் மின் அழுத்தம் பாயும் மின் கோபுரங்களை கூட்டமைக்கதேர்வு செய்கின்றன என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

ஆனால், இது ஒரு புறம் பாதுகாப்பு என்றாலும், பறக்கத் பழகும் நேரங்களில் இளம் பறவைகள் உயர் அழுத்த மின் கம்பிகளில் மோதி உயிர் இழக்கவும் செய்கின்றன. இதுவே மரங்களில் கூடமைத்தால் இந்த அபாயங்கள் நேருவது இல்லை. கடந்த ஆண்டு ஆய்வின்படி வெண் வயிற்று ஆழிக்கழுகுகள் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள புதுமடம், மண்டபம், பாம்பன், வேதாளை, தனுஸ்கோடி பகுதிகளில் கூடு அமைக்கும் பணிகள் தொடங்கின. இவற்றில் சில கூடுகள் தொடக்கத்திலேயே புறக்கணிக்கப்பட்டன. ஒரு சில கூடுகள் இறுதி வடிவம்எடுக்கும்நிலையில் புறக்கணிக்கப்பட்டன.

# தவெக அமைச்சரவையில் இடம்பெற்றதால் இழிவாக விமர்சித்து வருகிறார்கள் விசிக தலைவர் திருமாவளவன் பேச்சு



சென்னை: திமுக கூட்டணியில் இருந்தபோது நம்மைகொச்சைப்படுத்தியவர்கள், இன்று தவெக அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள போதும் நம்மை தொடர்ந்து விமர்சித்து வருவதாக விசிக தலைவர் திருமாவளவன் ஆதங்கம் தெரிவித்துள்ளார். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தனது இணையதள பக்கத்தில் காணொளி ஒன்றை பதிவிட்டுள்ளார். அதில் நம்மை பலவீனப்படுத்த வேண்டும் என்பதில் நமது பகைவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள் எனவும், இழிவாக விமர்சித்து வருகிறார்கள் என்றும் பேசியுள்ளார்.

காணொளியில் பேசிய அவர்,

"திமுக, மதிமுக, காங்கிரஸ் ஆகிய கட்சிகளை சேர்ந்தவர்கள் அமைச்சர்கள் ஆவதற்கும், விசிக கட்சியை சேர்ந்தவர் அமைச்சர் ஆவதற்கும் மிகப்பெரிய வேறுபாடு இருப்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

எந்தப் பின்புலமும் இல்லாமல் வஞ்சகமும், சூழ்ச்சியும் நிறைந்த அரசியல்களத்தில், அவமானங்களையும் அவதூறுகளையும் சகித்துக் கொண்டு எதிர்நீச்சல் அடித்து இந்த இடத்தை நாம் எட்டிப்பிடித்துள்ளோம். வேறு இயக்கங்களை, சமூகங்களை சார்ந்தவர்களாக இருந்திருந்தால் இதனை ஆகப்பெரிய சாதனையாக கொண்டாடியிருப்பார்கள்.

இவ்வாறு சாதனைப் படைத்த நிலையில்கூட புறக்கணிக்கப்படுகிறோம், கடுமையாக விமர்சிக்கப்படுகிறோம் என்ற நிலையில் தான் இருக்கிறோம். இந்த புரிதலோடு நாம் பயணத்தை வீரியமாக எடுத்துச் செல்லக்கூடிய தேவை உள்ளது.

இன்று இரண்டு சட்டமன்ற, இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அங்கீகாரம் பெற்ற ஒரு கட்சியாகவும், ஆட்சி அதிகாரத்தை பங்கு கொண்ட ஒரு இயக்கமாகவும் தகுதிகளை பெற்றுள்ளோம். அனைத்து தரப்பு மக்களின் நன்மதிப்பையும் நாம் பெற்றுள்ளோம்.

இன்னும் பன்மடங்கு விரியத்தோடு நாம் களமாட வெட்டியே தேவை உள்ளது. அதனால்தான் திமுக கூட்டணியில் இருந்தபோது நம்மை கொச்சைப்படுத்தியவர்கள் இன்றைக்கு தவெக கூட்டணி அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள நிலையில் மிகக் கடுமையாகவும், இழிவாகவும் விமர்சித்து வருகிறார்கள்.

நாம் இன்னும் குறிவைக்கப்படுகிறோம் என்பது தான் இதன் பொருள். நம்மை பலவீனப்படுத்த வேண்டும் என்பதில் நமது பகைவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள்.

இவைகளைக் கருத்தில் கொண்டு நாம் நம் காரியங்களை நடத்த வேண்டும். நம்மை எவராலும் அப்புறப்படுத்த முடியாது. இன்று தலைகீழாக மாறி உள்ள தமிழக அரசியல் களத்தில் நாம் மீண்டும் மீண்டும் தவிர்க்க முடியாத அரசியல் சக்தியாகவே களமாடி வருகிறோம்" என தெரிவித்துள்ளார்.

# ஈரானின் ஏவுகணை தளம் மீது அமெரிக்கா தாக்குதல்: மீண்டும் மேற்காசியாவில் போர் பதற்றம்?



தெஹ்ரான்: ஈரானின் ஏவுகணை தளம் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதல் மேற்கொண்டுள்ளது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்துள்ளதாக தகவல். இதனால் மேற்காசியாவில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே எட்டப்பட்ட தற்காலிகப் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, ஹார்முஸ் ஜலசந்தியில் பயணித்த சரக்கு கப்பல் மீது ஈரான் ட்ரோன்தாக்குதல் நடத்தியுள்ளதாகவெள்ளிக்கிழமை அன்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் குற்றச்சாட்டு வைத்தார். இதையடுத்து அமெரிக்கா இந்த தாக்குதல் மேற்கொண்டது.

ஈரானில் உள்ள ஏவுகணை தளம், ட்ரோன்கள் வைக்கப்பட்டுள்ள இடம் மற்றும் கடலோர பகுதிகளில் உள்ள ரேடார்கள் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

"போர்நிறுத்தத்தை அப்பட்டமாக மீறும் வகையில் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக சென்ற வணிகக் கப்பல் மீது ஈரான் மேற்கொண்ட தாக்குதலுக்கு அளிக்கப்பட்ட தகுந்த பதிலடியாக ஈரான் மீது தாக்குதல் மேற்கொண்டோம்" என்று குறிப்பிட்டு அமெரிக்க ராணுவ தலைமையகம் இந்த தாக்குதலை உறுதி செய்துள்ளது.

இஸ்லாமிய புரட்சிகர காவல் படை பதிலடி

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக வளைகுடா பகுதியில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்தி உள்ளதாக இஸ்லாமிய புரட்சிகர காவல் படை தெரிவித்துள்ளது. இதை அந்த நாட்டின் அரசு செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளது. மேலும், அமெரிக்கா அத்துமீறி தாக்குதலை மேற்கொண்டால் தங்களது பதிலடி மிக தீவிரமாக இருக்கும் என்று இஸ்லாமிய புரட்சிகர காவல் படை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், "வன்முறைக்கு வன்முறைதான் பதில்" என்று அமெரிக்க துணை அதிபர் வான்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இந்த மோதல் காரணமாக மேற்காசியாவில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# Tremors felt in Delhi, Jammu and Kashmir after magnitude 6.2 earthquake in Afghanistan



*An earthquake of magnitude 6.2 struck the Hindu Kush region in Afghanistan on Saturday, the National Centre for Seismology said.*

*The quake was at a depth of 215 kilometres, the NCS said. There were no immediate reports of casualties or damage.*

*According to the United States Geological Survey, the earthquake struck 43 km south of Jurm in northeastern Afghanistan.*

*Social media was abuzz with reports of jolts felt in parts of India, including Delhi and Srinagar. Some posts also claimed tremors were felt in neighbouring Pakistan, including in Lahore, Faisalabad and Islamabad.*

*People ran out of their doors in panic in Swat district in northern Pakistan's Khyber Pakhtunkhwa, a resident told Reuters. "It was very huge here in Swat, and it lasted for quite a long time. People came out of their houses, and women and children were seen crying in panic," he said.*

*Before this one, at least five moderate-intensity earthquakes have struck Pakistan's southeastern province of Balochistan since Friday. The region has been experiencing significant seismic activity.*

*On the other hand, twin earthquakes of magnitudes 7.2 and 7.5 hit Venezuela on June 25, killing at least 920, leaving more than 51,000 missing and causing widespread damage.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.